**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

O.S.No.13/2024

பி.வா.சா.3– கருணாநிதி த/பெ ராஜலிங்கம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 14.11.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பி.வா.சா.1–</u>** <u>கருணாநிதி த/பெ ராஜலிங்கம்</u>

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. நான் இலங்கையில் இருந்து அகதியாக வந்துள்ளேனா என்றால் இல்லை இலங்கையில் இருந்து தாயகம் திரும்பியவர் எனது பாட்டனார் தமிழ்நாட்டிலிருந்து இலங்கை சென்றார். நான் வனத்துறையில் கார்டு ஆக வேலை பார்க்கிறேன். இலங்கை அகதி என்ற முன்னுரிமையில் வேலை வாங்கினேனா என்றால் இல்லை தாயகம் திரும்பிய என்ற முன்னுரிமையில் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் வேலை வாங்கினேன்.

2. நான் எந்த வருடம் இலங்கையில் இருந்து தாயகம் திரும்பினேன் என்றால் 1972 ம் வருடம் ஆகும். எனது வீட்டிற்கும், 2 ம் பிரதிவாதி செல்வநாதன் வீட்டிற்கும் பொதுசுவர் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு நான்குபுறமும் என்ன உள்ளது என்றால் மேற்கு மருதை நிலம், கிழக்கு பாசனகண்ணார், வடக்கு சடையன் நிலம், தெற்கு துரைராஜ் நிலம் உள்ளது.

3. தென்புறம் 2 ம் பிரதிவாதி செல்வநாதன் நிலம் உள்ளது என்றால் தற்போது உள்ளது. வடக்கில் சடையன் நிலம் இல்லை செல்வமணி நிலம் தான் உள்ளது என்றால் தற்போது உள்ளது. தாவா சொத்தின் அருகில் எனக்கு நிலம் உள்ளதா என்றால் இல்லை ஒரு கிலோமீட்டர் தள்ளி உள்ளது எனது நிலத்தை தாண்டிதான் தாவா சொத்திற்கு செல்லவேண்டும். என்னுடைய நிலத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திலிருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்திலும் வேறு எங்கேயும் நிலம் இல்லை என்றால் சரியல்ல.

4. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா,ஆ 11 பத்திரத்தில் எந்த இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் கோவில் மந்தை பொது இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் சரியாக ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.11 பத்திரத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் வீட்டை வைத்து பணம் வாங்கியதாக எழுதியுள்ளது. எனது முன்னிலையில் பணம்

கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எந்த இடத்தில் வைத்து பணம் கொடுப்பட்டது என்றால் ஞாபகமில்லை.

5. ஈட்டுக்கடன் பத்திரம் எழுதினால் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யவேண்டும் என்ற விவரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். பதிவு செய்யாத ஈட்டுக்கடன் பத்திரம் செல்லாது என்றால் எனக்குத் தெரியாது. பி.வா.சா.ஆ.11 பத்திரத்திரத்தில் பாக்கியம் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் நாங்களாகவே போர்ஜரியாக தயார் செய்து கொண்டோம் என்றாலும் சரியல்ல. நான் பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் கையொப்பம் செய்துவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. வாதி பாக்கியம் 2ம் பிரதிவாதியிடம் எந்த வித பணமும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் 2008ம் ஆண்டு வேலையில் சேர்ந்தேன். பி.சா.ஆ.11 பத்திரம் எழுதியதாக சொல்லப்படும் காலத்தில் நான் வனத்துறையில் வேலையில் சேரவில்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எனது பக்கத்துவீட்டுக்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் நான்கெல்லையை சரியாக சொல்லாமல் மாற்றி மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. பி.சா.ஆ.11 பத்திரத்தில் என்னவாக கையொப்பம் செய்தேன் என்றால் பணம் கொடுத்ததற்காக கையொப்பம் செய்தேன். பி.சா.ஆ.11 பத்திரம் எழுதும் போது 1ம் பிரதிவாதி தங்கராசு ஊரில் தான் இருந்தார் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 பத்திரத்தில் தங்கராசு கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.11 பத்திரத்தில் தங்கராசு கையொப்பம் செய்யாததால் அந்தப்பத்திரத்திற்கும் தங்கராசுக்கும் சம்பந்தம் இல்லையென்றால் சரிதான்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–திரு.ஆர்.பாக்கியராஜ்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.